ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் தானியக் கிடங்கு என்று புதிதாக ஒரு கட்டடம் மாண்புமிகு அம்மாவுடைய அரசால் இப்பொழுது கட்டித் தரப்பட்டிருக்கின்றது.

அதேபோல ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒவ்வொரு நகரத்திலும் அமைத்துத் தரப்பட்டிருக்கின்றது. அங்கே தானியத்தை இருப்பில் வைத்துவிட்டு, அதில் 60 சதவிகிதத் தொகை எவ்வளவோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சீக்கிரம் முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: 60 சதவிகிதத் தொகை கூட்டுறவுச் சங்கத்தில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் (குறுக்கீடு) முக்கியமான விவரம் சொல்கின்றேன். நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி? நீங்கள் சென்னையில் குடியிருக்கிறவர். சென்னையில் குடியிருக்கிறவருக்கு விவசாயிகளின் உற்பத்தியைப் பற்றித் தெரியுமா? ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் (குறுக்கீடு) நல்ல பதிலை வரவேற்க வேண்டும். 60 சதவிகிதத் தொகையை விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் வழங்குகின்ற ஏற்பாட்டினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அற்புதமாகச் செய்து கொடுத்திருக்கின்றது.

எனவே, எப்பொழுது விவசாயிகள் விரும்புகின்ற விலை கிடைக்கின்றதோ அதுவரை உணவு தானியங்களை இருப்பு வைத்து, விலை உயர்கின்றபோது விற்றுக்கொள்ளலாம் என்பதற்கான ஏற்பாட்டினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது என்ற நற்செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

145—

பேருந்து வசதி

***8145—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2020 மார்ச் 20]

சிங்காநல்லூர் தொகுதி, திருச்சி பிரதான சாலையிலிருந்து ஒண்டிப்புதூர் சுங்கம் மைதானம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிங்காநல்லூர் தொகுதி, திருச்சி பிரதான சாலையிலிருந்து ஒண்டிப்புதூர் சுங்கம் மைதானம் வழியாக அரசு போக்குவரத்துக் கழகம் கோவை கோட்டத்தின் மூலமாக 5 நகரப் பேருந்துகள் 54 நடைகளும், தனியார் பேருந்து ஒன்று 17 நடைகளும் ஆக மொத்தம் 6 பேருந்துகள் மூலமாக 71 நடைகள் தற்போதைய பயணிகளின் அடர்விற்கேற்ப இயங்கி வருகின்றன. எனவே, இவ்வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு நான் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட நேரத்தில், 4 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வினா கொடுக்கப்பட்டது. அப்போது கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட இன்றைக்கு இந்த வினா விவாதத்திற்கு வந்திருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகப்படியான நடைகளில் பேருந்துகள் இயக்கப்படுவதாகக் குறிப்பிட்டு, கூடுதல் பேருந்து இயக்குவதென்பது அரசின் பரிசீலனையில் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள்.

ஒண்டிப்புதூர் சுங்கம் மைதானத்திற்கு அருகில் சூரியா நகர், காமாட்சி நகர், கண்ணன் நகர், செந்தில் நகர், சிவலிங்கபுரம், சக்தி நகர், ராம் நகர், சின்னசாமி லே—அவுட், ஸ்ரீகாமாட்சி நகர், தனலட்சுமி நகர் முதலிய ஏராளமான பகுதிகள் இருக்கின்றன. இங்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றார்கள். அதுவும் குறிப்பாக நடுத்தர மக்கள், ஏழையெளிய மக்கள், தினக் கூலிக்குச் செல்கின்ற மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளாக இந்தப் பகுதிகள் திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11–25

அங்கு பேருந்து அதிகப்படியான முறை வருவதில்லை என்று மக்கள் என்னிடத்தில் ஏற்கெனவே கோரிக்கை வைத்த காரணத்தினால்தான், இந்த வினாவினை நான் சட்டப் பேரவையில் எழுதிக் கொடுத்தேன். தற்போது இந்த வினா வந்தவுடனேயே நேற்றைக்கும் ஒண்டிப்புதூர் பகுதியிலிருக்கும் மக்களிடத்தில் நான் தொலைபேசி வாயிலாகக் கேட்டேன். அதைப்போலவே அரசுப் பேருந்தில் பணியாற்றக்கூடியவர்களிடத்திலும் கேட்டேன். அப்படிப் பேசிய நேரத்தில் 4 அரசு பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. அதுவும், தடம் எண் 75, பேருந்து பத்து நடைகள் வருகின்றது; தடம் எண் 88, பேருந்து பத்து நடைகள் வருகின்றது; தடம் எண் 109, பேருந்து இரண்டு நடைகள் வருகின்றது. தடம் எண் 72, பேருந்து இரண்டு நடைகள்தான் இயக்கப்படுகின்றது. தனியார் பேருந்துகளை இயக்குவதற்கான permit இருந்தும், அங்கு இயக்கப்படுவதில்லை என்கிற தகவல்தான் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே, மீண்டும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மூலமாக அந்தப் பகுதியில் ஆய்வு செய்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அங்குள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், அதிகப்படியான எண்ணிக்கையில் பேருந்துகளை இயக்குவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கேள்வி வந்தவுடனேயே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் விசாரித்தேன். அங்கு இயக்கப்படக்கூடிய பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 60 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த வழித்தடத்தில் காலை மற்றும் மாலை நேரங்களில் வேண்டுமானால் கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கும். எனவே, காலை மற்றும் மாலை நேரங்களில் அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, தேவை ஏற்படுமாயின், கூடுதல் நடைகளை அந்த வழித்தடத்தில் இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட மசக்காளிபாளையம் பகுதியில் 15,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றார்கள். மசக்காளிபாளையத்தை ஒட்டி, மகாலட்சுமி நகர், ஜெயவர்த்தனவேலு நகர், வேலப்பன் நகர், பாலன் நகர், ராஜலெட்சுமி நகர், ஆண்டாள் நகர், வ.உ.சி. நகர், தனலட்சுமி நகர், குமரன் நகர், லால்பகதூர் சாஸ்திரி நகர், கொண்டல்சாமி நகர், பெரியார் நகர் என்று பல்வேறு நகர்கள் இருக்கின்றன. மசக்காளிபாளையம் பகுதியிலிருந்து Hope College வரை செல்லக்கூடிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. மசக்காளிபாளையத்திலிருந்து Hope College, பீளமேடு நான்கு முனை சந்திப்பு சுமார் 3 கி.மீ. தூரம் இருக்கிறது. இந்தப் பகுதியைச் சுற்றிலும் வசிக்கக்கூடிய மக்கள் சாதாரண ஏழை, எளிய மக்கள். தினக்கூலி வேலைக்குச் செல்லக்கூடியவர்கள். குறிப்பாக, கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் நடுத்தர மக்கள் நிறைந்து வாழக்கூடிய பகுதி. ஆகவே, மசக்காளிபாளையம் பகுதியிலிருந்து Hope College, பீளமேடு வழியாக காந்திபுரம் செல்வதற்குப் பேருந்துகளை இயக்கினால் அந்தப் பகுதியில் வசிக்கக்கூடிய மக்கள் அதிக நன்மையடைவார்கள். ஆகவே, மசக்காளிபாளையத்திலிருந்து காந்திபுரம் செல்வதற்குப் பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற பகுதி மாநகராட்சிப் பகுதி. அந்தப் பகுதியில் பேருந்து வசதி இல்லாமல் இருக்காது. குறிப்பிட்ட வழித்தடத்தில் மிகவும் குறுகலான சாலைகளாக இருப்பதால், அந்தப் பகுதியிலிருந்து சிறிது தூரம் நடை பயணமாக வந்துதான் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்த வழித்தடத்தில் நிறைய நகர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, உண்மையிலேயே அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க முடியுமாயின், அதுகுறித்து

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருவெறும்பூர் தொகுதி, மத்திய பேருந்து நிலையத்திலிருந்து காட்டூர் வழியாக துவாக்குடி வரை செல்வதற்கு ஏற்கெனவே இயக்கப்பட்ட பேருந்து தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. தடம் எண் 128 பேருந்தை இந்த அரசு மீண்டும் இயக்க வேண்டும். அதேபோன்று, ஏற்கெனவே, மார்க்கெட், பால் பண்ணை, காட்டூர் வழியாக கல்லணை வரை இயக்கப்பட்ட பேருந்து தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. துவாக்குடியிலிருந்து காட்டூர், பால் பண்ணை, சஞ்சீவி நகர் வழியாக சத்திரம் பேருந்து நிலையம் வரை இயங்கி வந்த பேருந்தும் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. துவாக்குடியிலிருந்து மத்திய பேருந்து நிலையம் வரை LSS தடம் எண் 128 டீன் நகர் பேருந்து நிலையத்தில் நின்றுதான் சென்று கொண்டிருந்தது. கடந்த 20 வருடங்களாக இது வழக்கத்தில் இருந்து வந்தது. இன்றைக்கு அதுவும் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதனால், அம்பேத்கர் நகர், ஐ.ஏ.எஸ். நகர், விஜயநகரம், வி.கே.என். நகர் போன்ற அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கின்ற மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. அதேபோன்று, நவல்பட்டு அண்ணா நகர் பகுதியில் ஓர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. ஒட்டுமொத்த திருவெறும்பூர் பகுதிக்கும் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக இப்பள்ளி ஒன்றுதான் இருக்கிறது. தினந்தோறும் காலை 8–45 மணியளவில் அந்தப் பகுதியைக் கடந்து செல்கின்ற தடம் எண் 128A பேருந்து அங்கு நின்று சென்றால், சுற்றுவட்டாரக் கிராமங்களில் இருக்கின்ற பெண்கள் இன்னும் அதிக அளவில் அந்தப் பள்ளியில் சேருவதற்கு ஏதுவாக அமையும். அதேபோன்று, பொன்மலை பகுதி வரை வருகின்ற அந்தப் பேருந்தை கீழ்க்கண்டார்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும். சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து பூசத்துறை வழியாக கல்லணைக்குச் செல்கின்ற பேருந்தை சிறிது நீட்டித்து, வேங்கூர், கீழமுருகூர், லூர்து நகர், நடராஜபுரம், அரசங்குடி வழியாக கல்லணைக்குச் செல்கின்றவாறு பேருந்தை இயக்கினால். . .

2020 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

முற்பகல் 11–30

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: முடிக்கப்போகிறேன். அதைச் சுற்றியிருக்கின்ற மக்களெல்லாம் பயன்பெறும் வகையில் அது இருக்கும். அதேபோல், பொய்கைக்குடி கிராமத்திலிருந்து தேநீர்பட்டிக்கு காலையிலும் மாலையிலும் பேருந்து இயக்க வேண்டும். அந்தக் கிராமத்தில் அரசு பள்ளி இருக்கிறது. அதற்கும் பேருந்து வசதி செய்து தர வேண்டும். மக்களுடைய இந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவரது கோரிக்கைகளை எழுத்துப்பூர்வமாகப் பெற்று, துறை அதிகாரிகளிடம் கொடுத்து ஆய்வு செய்து, தேவை ஏற்படுகின்ற வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும். மேலும், பேருந்து நிறுத்தம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுவும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி, அணைக்கரை கொள்ளிடம் ஆற்றுப் பாலத்தில் கடந்த இரண்டரை ஆண்டுக் காலமாக போக்குவரத்து வசதி நிறுத்தப்பட்டுள்ளது. பெருமழை பெய்த காலத்தில் கொள்ளிடம் ஆற்றங்கரை சரியில்லாத காரணத்தால் அதைப் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் போக்குவரத்தை அரசு நிறுத்தியது. ஆனால், இரண்டரை ஆண்டுக் காலமாக போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால், கிட்டத்தட்ட 3 கி.மீ. தூரத்திற்கு பேருந்து வசதி இல்லாமல், இரு சக்கர வாகனங்களிலோ, தனியார்

ஆட்டோக்களிலோ, ஷேர் ஆட்டோக்களிலோதான் பொது மக்கள் சென்று வருகிறார்கள்.

கும்பகோணத்திலிருந்து சென்னை செல்கிற பிரதான சாலையாக விளங்குவது மட்டுமல்லாமல், கடலூர், திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மூன்று மாவட்டங்கள் ஒன்றுகூடும் பகுதியாகவும் அணைக்கரை கொள்ளிடம் பாலம் திகழ்கிறது. நான் சொல்கிற செய்தி எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்களுக்கும் தெரியும். சென்னை—கும்பகோணம் வந்து செல்கிற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். எனவே, நீண்டநாள் கோரிக்கையாகவுள்ள இந்தப் பிரச்சினைக்காக பொதுமக்கள் போராடுகிற ஒரு சூழ்நிலையும் எழுந்துள்ளது. எனவே, இதனை அருள்கூர்ந்து பரிசீலித்து, போக்குவரத்துச் சேவையினை மீண்டும் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அந்தச் சாலை சரியில்லாத காரணத்தால்தான் பேருந்து நிறுத்தப்பட்டதாகக் கூறியிருக்கிறார். இப்போது சாலை சரியாக இருக்குமாயின், அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமுன் காப்போம் என்னும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மற்றும் கழகத் தலைவர் அண்ணன் தளபதி ஆகியோரின் தாரக மந்திரத்திற்கேற்ப, இன்று வேகமாகப் பரவிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸிலிருந்து விடுபட தன்னம்பிக்கையுடனும், சுகாதாரமாகவும், வலிமையுடனும் வாழ வேண்டுமென்று வந்தவாசி சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு அன்பான வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி—சேத்பட் வழித்தடத்தில் W7 என்ற town bus இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தப் பேருந்து மாம்பட்டு, அரசூர், மேல்பாதி, தக்கண்டராயபுரம் வழித்தடத்தில் இயக்கப்பட வேண்டும். வடவணக்கம்பாடியிலிருந்து மேல்பாதி தக்கண்டராயபுரம் கிட்டத்தட்ட 7 கி.மீ. தூரமே உள்ளது. அந்த குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு எந்தவித பேருந்து வசதியும் இல்லை. ஆகவே, W7 பேருந்து வந்தவாசியிலிருந்து மாம்பட்டு, ஆராசூர், மேல்பாதி, தக்கண்டராயபுரம், வடவணக்கம்பாடி வழியாக இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்து வழித்தடத்தை மாற்றி இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அவ்வாறு ஒரு பேருந்தின் வழித்தடத்தை மாற்றும்போது, ஏற்கெனவே இயக்கப்பட்ட வழித்தடத்தில் இருக்கக்கூடிய பொது மக்கள் பிரச்சினை செய்கிறார்கள். அந்தக் கோரிக்கையை பரிசீலித்து, அங்கு பிரச்சினை இல்லாதபட்சத்தில், அந்த வழித்தடத்தை மாற்றி இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக பேரவைக் கூட்டத் தொடரை ஒத்தி வைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.